Volume 2 Issue 2 February 2021 E-ISSN: 2582-2063

# சேலம் மாவட்டத்தில் புத்த சமயம் - ஓர் வரலாற்று பார்வை

**முனைவர் மா. பாண்டிக்கனி**
*உதவிப் பேராசிரியர்*
*அரசு மகளிர் கலைக் கல்லூரி, சேலம்*

## முன்னுரை

உலகத்திலே அறம்குன்றி மரம் வளர்ந்து மக்கள் அல்லலுறுங் காலங்களிலெல்லாம் புத்தர்கள் தோன்றி அறவழியைப் புகட்டி மக்களை நல்வழிப்படுத்தினார்கள்.வடநாட்டிலிருந்து தென்னாட்டில் வந்த மதங்களைப் பண்டைய பெரியோர் இரண்டு வகையாகப் பிரித்திருக்கின்றனர். அவை பிராமண மதம், சமணமதம் என்பன. பிராமண மதம் என்பது வைதீக மதம். சமண மதம் என்பது புத்த ஜைன மதங்களாகும்.பரந்த உயர்ந்த பெரிய நோக்கமும், மனப்பான்மை கொண்டவர்களான புத்த ஜைனர்கள் தங்கள் மதக்கொள்கைகளை அறிய வேண்டும் என்றும் பற்பல கற்ப காலங்களில் கணக்கற்ற புத்தர்கள் தோன்றி அறநெறியை நாட்டிச் சென்றார்கள்.புகழ்பெற்ற புத்த சமயம் இந்தியாவிலும் பின் தமிழ்நாட்டிலும் அசோகர் காலத்தில் பரவி புகழ்பெற்றது. தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில் புத்தசமயம் இருந்ததை பற்றி இவ்வாய்வு மேற்கொள்ளப் படுகிறது.

## சேலம் மாவட்டத்தின் வரலாறு

கங்கையின் புனிதமாய் காவிரி பாயும் கன்னித் தமிழ்நாட்டில் தெய்வத் திருவருள் மணக்கும் திருக்கோவில்கள் மலிந்த மாவட்டங்களில் ஒன்று சேலம் மாவட்டம். தமிழ்நாட்டின் பெருமைக்கும் வளத்திற்கும் காரணமாக அமைந்து விளங்குகிறது. தமிழ்நாட்டின் பெருமைக்கும் சிறப்புக்கும் காரணமாக உள்ள சேலம் மாவட்டம் வரலாற்று சிறப்பு உடையதாக அமைந்து விளங்குகிறது.[1] இந்தியாவின் முதல் மாவட்டம் என்ற சிறப்பை உடைய சேலம் மாவட்டம் வடக்கே ஓசூர் முதல் தெற்கே தாத்தையங்கார் பேட்டை வரையும் மேற்கே காவிரிக் கரையிலிருந்து கிழக்கே தலைவாசலையும் எல்லையாக கொண்டு மிகப்பெரிய மாவட்டமாக 1792-ல் உருவாக்கப்பட்டது.[2]

கிழக்கிந்திய கம்பெனிக்கும் திப்பு சுல்தானுக்குமிடையே 1792-ல் நடைபெற்ற பாரமஹால் போரின் முடிவில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் திப்பு சுல்தானிடமிருந்து பெறப்பட்ட பகுதிகளைக் கொண்டு பாரமஹால் மற்றும்சேலம் மாவட்டம் உருவாக்கப்பட்டது. 1800-ல் பாரமஹால் மாவட்டமும் சேலத்தைத் தலை நகராகக் கொண்ட தாலக்காட் மாவட்டமும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. பின்னர் 1801-ல் மீண்டும் இரண்டும் ஒன்றிணைக் கப்பட்டது. 1808-ல் இ.ஆர். ஹார்கிரேன் மாவட்ட ஆட்சித்தலைவராக இருந்த போது தாலகாட் மாவட்டம் சேலம் மாவட்டம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. சேலம், பாரமஹால் இரண்டும் இணைந்த மாவட்டத்தின் தலைநகரமாக சேலம் 1830-ல் உருவாக்கப்பட்டது.[3]

## சேலம் மாவட்டத்தில் புத்த சமயம்

இந்தியாவில் தோன்றி உலகமெங்கும் பரவி நிற்கும் புத்த சமயத்தின் பஞ்சசீல கோட்பாடுகளின் பயிற்சிப் பாசறையாக மையமாக அன்று திகழ்ந்த அன்றைய சீலமாகிய (Sheelam) இன்றைய சேலத்தின் புத்த சமயத்தின் சான்றுகளாக நின்று நிலைத்த இரண்டு புத்தர் சிலைகள் இன்று வரலாற்றின் சாட்சிகள். சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் தாலுக்காவிற்கு உட்பட்ட ஆரகளூர் என்ற பழம்பெரும் பூமியில் சேலம் மாவட்டத்தின் தலைவாசலாக விளங்கும் பகுதியில் உள்ளது தியாகனூர் என்ற கிராமம்.அனைத்தையும் தியாகம் செய்து நிர்வாண கோலம் ஏற்ற புத்த பகவான் பெயரில் 'தியாகனூர்' என்று பெயர் பெற்று பற்பல நூற்றாண்டுகளைக் கடந்து நிலைத்த இரண்டு புத்தர் சிலைகளோடு இன்றும் அவ்வாறே அழைக்கப்பட்டு வருவது இந்த பகுதி ஒரு புத்த பூமி என்பதை

உறுதிபடுத்துவதாக அமைந்துள்ளது. 'சீலநாடு' என்று அழைக்கப்பட்ட இந்த பகுதியைச் சுற்றிலும் அமைந்துள்ள இடங்களின் பெயர்கள் இந்த கருத்தை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இன்று 'போதமலை' என்று அழைக்கப்பட்டு வருவது அன்று 'போதிமலை' இன்று தர்மபுரி என அழைக்கப்படும் பகுதி அன்று 'தம்மபுரி' இன்று சேர்வராயன் மலை என்று அழைக்கப்படும் ஏற்காடு மலை அன்று 'சீலராயன் மலை' இன்று சீலநாக்கள்பட்டி என அழைக்கப்படும் பகுதி அன்று 'சீலநாக்கன்பட்டி' இன்று புத்திரகவுண்டன் பாளையம் என்று அழைக்கப்படும் பகுதி அன்று 'புத்தர் கவுண்டன் பாளையம்' இன்று பெத்தநாயக்கன் பாளையம் என்று அழைக்கப்படும் இடம் அன்று 'புத்த நாயகன் பாளையம் என அழைக்கப்பட்டது![4]

சேலம் மாவட்டத்தில் உள்ள இப்பெயர்கள் எல்லாம் சீலநாடு என்ற புத்த பூமியின் வரலாற்றை உறுதிப்படுத்துவதாக உள்ளது.சேலம் மாவட்டம் ஆத்தூர் தாலுக்கா தலைவாசல் வட்டத்தில் ஆரகளூர் என்ற பழம்பெரும் ஊரில் உள்ள தியாகனூர் கிராமம் உள்ளது.

**தியாகனூர்**

சேலம் மாவட்டத்திலுள்ள ஆத்தூர் அருகில் வரலாற்று சிறப்புமிக்க ஆரகளூர் அமைந்துள்ளது. அந்த ஆரகளூருக்கு மிக அருகில் தியாகனூர் என்ற ஒரு கிராமம் இயற்கையின்பால் அனைவரையும் கவரக்கூடிய வகையில் அமைந்துள்ளது. புவியியல் நிலையின்படி 11.56093$^0$வ, 78.779955$^0$கி. ஆரகளூரிலிருந்து இக்கிராமம் அமைந்துள்ளது. தியாகனூரில் பழமை வாய்ந்த புத்தர் கோவில் அமைந்துள்ளது.

"Thiyanam" (Meditation), தியாகம் (Sacrifice) புத்த சமய துறவிகள் பல ஆண்டுகளுக்கு முன்பு அவ்விடத்தில் தியானம் செய்து வாழ்ந்து வந்ததால் அவ்வூர் தியாகனூர் எனப் பெயர் பெற்றது என்று அங்கு வாழும் முதியோர்களின் கருத்து.

தியாகனூர் சுமார் 1000 ஆண்டுகளுக்கு மேலான பழமையான பாரம்பரியத்தைக் கொண்டது. அங்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு புத்தர் சிலைகள் காணப்படுகிறது. அதில் ஒரு சிலை புத்தகோவில் கட்டி மக்களால் வழிபடப்படுகிறது. தியான மண்டபம் ஒன்று கட்டப்பட்டு 2013-ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சியர் திரு.மகரபூசணம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.[5]

**அண்ணா புத்தர்**

6 அடி உயரத்தில் அமர்ந்த தியான நிலையில் புதிதாக எழுப்பப்பட்ட கோயிலுக்குள் இருக்கும் பெரிய புத்தர் சிலை 'அண்ணா புத்தர்' என்று அழைக்கப்படுகிறார். கோயிலுக்கு எதிரே ஒரு அரசமரம் (போதிமரம்) உள்ளது. புத்த சிலையை கொங்கண சித்தர் என்றும் சிலர் அழைக்கின்றனர்.இன்றைக்கு ஒரு 7 அல்லது 8 ஆண்டுகளுக்கு முன்பு இந்த கோயில் கட்டப்பட்டிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. 1972-ஆம் ஆண்டு புத்த கோயிலுக்கு கும்பாபி'கம் நடத்தப்பட்டது. இரண்டு ஏக்கர் நிலம் புத்த கோயிலுக்கு சொந்தமாக உள்ளது. இந்த புத்தருக்கு தினமும் பூஜைகள் செய்யப்பட்டு வருகிறது. ஒருமுறை அண்ணா புத்தர் சிலையை சென்னைக்கு எடுத்துச்செல்ல ஒரு சிலர் முயன்றபோது அதை இந்த தியாகனூர் கிராம மக்கள் வன்மையாக எதிர்த்தனர் இந்த கிராமத்தோடு ஐக்கியபட்டுப்போன புத்த கோயில் தியாகனூர் பகுதியின் ஒரு வரலாற்று நினைவுச் சின்னமாகதிகழ்கிறது.

**தம்பி புத்தர்**

ஐந்தடி உயரத்தில் வயல் வெளியில் வேப்ப மரத்தடியில் இருக்கும் இந்த புத்தர் சிலையை தம்பி புத்தர் என அழைக்கப்படுகிறது. கேட்பாரற்று வயல் வெளியில் வேப்ப மரத்தடியில் இருந்த இந்த புத்தர் சிலைக்கு அப்போதைய சேலம் மாவட்ட கலெக்டர் மகரபூ'ணம் அவர்கள் ஒரு தியான மண்டபம் கட்டி எழுப்பித் திறந்துவைத்தார்.பீகாரில் உள்ள

‘இராஜகிரகம்’என்ற இடத்தில் (சுயுதுர்ஜசு)உள்ள தியான மண்டப பாணியில் இந்த தியான மண்டபம் வடிவமைக்கப்பட்டுள்ளது[6].

28.6.2013 அன்று கட்டி முடிக்கப்பட்ட இந்த தியான மண்டபத்தில் வயல் வெளியில் இருந்த இந்த ஐந்தடி உயர புத்தர் சிலைக்கு 3 அடி உயர தாமரை பீடம் அமைக்கப்பட்டு அதன் மீது இந்த புத்தர் சிலை பொறுத்தப்பட்டுள்ளது. “சேலம் மாவட்டத்தில் ஒரு புத்த கயா என கூறும் அளவிற்கு தியாகனூர் புத்தர் சிலை மண்டபம் அமைந்துள்ளது.

**சீனப்பயனி யுவான் சுவாங் வருகை**

சீன தேசத்து புத்த மத அறிஞர் யுவாங் சுவாங் கி.பி.633-643 ஆண்டுகள் காலகட்டத்தில் சேலம் மாவட்டத்தில் இந்த தியாகனூர் பகுதிக்கு வந்து இந்த புத்தர் சிலைகளை வணங்கி இங்கே தியானம் செய்து திரும்பியிருக்கிறார் என்று ‘சேலம்சைக்ளோ பீடியா்’ (SALEM CYLLOPEDIA - 1992) என்ற நூலை இயற்றிய திரு. இராஜண்ணன் குறிப்பிடுகிறார். அதே போல, மகாயாண புத்தசமய அறிஞரான தத்துவஞானி போதிதர்மன்இந்த சேலம் மாவட்டதியாகனூர் கிராமத்தைச் சேர்ந்தவர் என்றும் சீன பேரரசின் சக்ரவர்த்தியின் அழைப்பினை ஏற்று சேலத்தில் இருந்து சீன தேசத்திற்கு கி.பி. 480 ஆம் ஆண்டு சென்றார். என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். போதிதர்மன் போதித்த தியான மார்க்கம் (THE DHYANA SCHOOL OF MEDITATIOW) சினாவில் ‘‘ான்’

(CHAN) என்றும் ஐப்பானில் ‘ஜென்’ என்றும் பரவி நிலைத்தது என்றும் திரு.இராஜண்ணன் குறிப்பிடுகிறார்.[7]

கி.பி ஆறாவது, அல்லது ஏழாவது நூற்றாண்டுக்குப் பின்னர் வைதீக மதம் தனது அடிப்படைக் கொள்கைகள் சிலவற்றில் மாறுதல் செய்து கொண்டு புத்துயிர் பெற்றது. அதவாது யாகங்களில் உயிர்க்கொலை செய்வதை நிறுத்தியதோடு, கொற்றவை, முருகன், சிவன், திருமால் முதலான திராவிட தெய்வங்களை தன் மதக் கடவுளாக ஏற்றுக் கொண்டு புதிய உருவம் பெற்றுவிட்டது.

**முடிவுரை**

புத்தர்களைக் குறித்த பெரும்பாலான சித்தரிப்புகளில் அவர்களுடைய போதி நிலையினைக் குறிக்கச் சில சிறப்புக் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. புத்த சமயம் முக்கியமாக ஆசியாவிலேயே பின்பற்றப்பட்டாலும் உலகெங்கும் தற்போது 350 மில்லியன் முதல் 1.6 பில்லியன் புத்தர்கள் இருப்பதாகக் கணிக்கப் பட்டுள்ளது. (350-550 மில்லியன் என்பது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட எண்ணிக்கை) அத்துடன் உலகில் மிக வேகமாகப் பரவி வரும் சமயங்களில் புத்தமும் ஒன்றாகும்.

பல சிறப்புகள்பெற்ற சேலம் மாவட்டத்தின் ஆரகளுர், தியாகனூர் பகுதிகள் ஒரு வளர்ச்சி பெற்ற சுற்றுலா தலமாக இன்னமும் உருவாகவில்லை. இந்த பகுதியின் சிறப்புகளைப் பற்றி சேலம் மாவட்ட நிர்வாகம் வெளியிட வேண்டும். அதே போல, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் இந்த பகுதிகளின் சிறப்புகளை அவர்கள் வெளியிடும் வழிகாட்டி நூல்களில் குறிப்பிட்டு இந்த பகுதி சுற்றுலா வளாச்சி பெற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ஆரகளுர் காமநாதீஸ்வரர் திருக்கோயில் அ்ட பைரவர்கள் ஸ்தலம், புத்தர் தியான மண்டபம் புத்தர் கோயில் ஆகியவை இனி, இந்திய அளவிலும், சர்வதேச அளவிலும் புகழ்பெற்று வளர்ச்சி பெறதமிழக அரசும், மாவட்ட நிர்வாகமும் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது இப்பகுதி மென்மேலும் வளர்ச்சி பெறும் என்பதில் ஐயமில்லை.

**மேற்கோள்கள்**


1. தமிழ்நாட்டின் சேலம் மாவட்டம், சில ஆய்வுகள், காவ்யா பதிப்பகம், பெங்களூர், 1988. ப..53.
2. ச.சரவணன், சேலத்து இரும்பு, விசாலாட்சி பதிப்பகம், சென்னை, 1967. ப.12.
3. கர்னல்ரீடு அறிக்கை, கையெடுத்து பிரதி-1980.
4. விகடன், மாதஇதழ், சேலம், 9 ஜுலை-2011. ப.5.
5. தினமனி, நாளிதழ் சேலம், 5 மார்ச்-2012. ப.10.
6. மாலை மலர், நாளிதழ் சேலம், 1 மார்ச் -2013. ப.17.
7. விணவு,நாளிதழ் சேலம், 27 மார்ச்-2012. ப.8.
8. Buddhism:a non –Theistic by helmuth voglasenapd. p.36.